


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நேற்று முன்தினம் (19.1.2024) சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைக்கும் விதமாக கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிக்கான சுடரை ஏற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, ஒன்றிய தகவல் ஒளிபரப்பு மற்றும் இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர், ஒன்றிய மீன்வளம், கால்நடை, பால்வளத்துறை மற்றும் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை இணை அமைச்சர் எல். முருகன், ஒன்றிய உள் துறை, இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை இணை அமைச்சர் நிசித் பிரமாணிக், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு வீரர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## உலகத் தரத்தில் விளையாட்டுக் கட்டமைப்புகள்

# தமிழ்நாடு, இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரம்!

## ‘கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் - 2023’ தொடக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஜன.21–**

**உலகத்தரத்தில் விளையாட்டு கட்டமைப்புகளை உயர்த்திக் கொண்டு வருகிறோம் என்றும் தமிழ்நாடு இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரமாக விளங்குகிறது என்று, கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் – 2023 தொடக்க விழாவில் உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.1.2024) சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்2023 தொடக்க விழாவில் ஆற்றிய உரை வருமாறு :**

எல்லார்க்கும் எல்லாம் – அனைத்துத் துறை வளர்ச்சி அனைத்து மாவட்ட வளர்ச்சி – அனைத்து சமூக வளர்ச்சி என்பதை உள்ளடக்கமாக கொண்ட நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக வளர உழைத்துக் கொண்டு வருகிறோம்.

ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் என்பது எப்படி நம் இலக்கோ அதேபோல, தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரமாக நிலைநிறுத்துவதும் நம்முடைய குறிக்கோள்! இந்த இலக்கை நோக்கிப் பயணிக்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி அவர்களை நான் பாராட்டுகிறேன்.

### உலகத் தரத்தில் விளையாட்டு கட்டமைப்பு!

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு சென்னை மாமல்லபுரத்தில், 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி, ஏ.டி.பி. சேலஞ்சர் டூர், சென்னை ஓப்பன் சேலஞ்சர், ஆடவர் ஆசிய சாம்பியன்ஸ் டிராபி 2023, ஸ்குவாஷ் உலக கோப்பை 2023, அலைச்சறுக்குப் போட்டி, கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் போன்ற வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வுகளை நம்முடைய தமிழ்நாட்டில் நடத்தியிருக்கிறோம். அதே நேரத்தில், விளையாட்டு கட்டமைப்புகளையும் உலகத் தரத்திற்கு உயர்த்திக் கொண்டு வருகிறோம்.



‘கேலோ இந்தியா 2023’ விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைக்க நேற்று முன்தினம் (19–01–2024) சென்னை வந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நினைவுப் பரிசை வழங்கினார்.

இந்தியாவிலேயே முதன் முறையாக, பாரா வீரர்களுக்கு 6 விளையாட்டு அரங்கங்கள், ராமநாதபுரத்தில் ஒலிம்பிக் நீர் விளையாட்டு அரங்கம், சென்னை, மதுரை, திருச்சி மற்றும் நீலகிரியில் “ஒலிம்பிக் அகாடமி, முதல் கட்டமாக 10 சட்டமன்றத் தொகுதிகளில், “மினி ஸ்டேடியம்” புதிய மாவட்டங்களான தென்காசி, மயிலாடுதுறை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை மற்றும் செங்கல்பட்டில் மாவட்ட விளையாட்டு மையங்கள் என பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் ஜல்லிக்கட்டுக்கு மதுரையில் 62 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ”கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அந்த அரங்கத்தை வரும் 24ஆம் தேதியன்று நான் திறந்து வைக்க இருக்கிறேன்.

தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையம் இந்த ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் வெகு விரைவில் துவங்கப்பட இருக்கிறது.

### கேலோ இந்தியா லோகோவில் வள்ளுவருக்கு இடம்!

மணிப்பூரில் நிலவும் பிரச்சினைகளால் அங்குள்ள விளையாட்டு வீரர்கள் பயிற்சியை தொடர்ந்து மேற்கொள்ள அவர்களை சகோதர உணர்வோடு தமிழ்நாட்டிற்கு வரவேற்று, பயிற்சி கொடுத்தது நமது திராவிட மாடல் அரசு. அவர்களில் சிலர், இந்த கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கிறார்கள்.

கேலோ இந்தியா போட்டி தமிழ்நாட்டில் நடப்பது எங்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய மகிழ்ச்சி. தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் டெமோ விளையாட்டாக இந்த முறை சேர்க்கப்பட்டிருக்கிறது.

கேலோ இந்தியா 2023 லோகோவில் வான்புகழ் வள்ளுவர் இடம் பெற்றிருக்கிறார். அந்தச் சிலை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், அய்யன் திருவள்ளுவருக்கு இந்திய நாட்டின் தென்முனையில் வானுயர அமைக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு சென்னை மாமல்லபுரத்தில், 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி, ஏ.டி.பி. சேலஞ்சர் டூர், சென்னை ஓப்பன் சேலஞ்சர், ஆடவர் ஆசிய சாம்பியன்ஸ் டிராபி 2023, ஸ்குவாஷ் உலக கோப்பை 2023, அலைச்சறுக்குப் போட்டி, கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் போன்ற வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வுகளை நம்முடைய தமிழ்நாட்டில் நடத்தியிருக்கிறோம். அதே நேரத்தில், விளையாட்டு கட்டமைப்புகளையும் உலகத் தரத்திற்கு உயர்த்திக் கொண்டு வருகிறோம்.

அதேபோல், ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடிய வீரமங்கை வேலுநாச்சியார் சின்னமும் அதில் இடம் பெற்றிருப்பது நமக்குக் கூடுதல் பெருமை. விளையாட்டையும், வளர்ச்சியின் இலக்காகக் கருதி செயல்பட்டு வருகிறோம்.

சுயமரியாதை மற்றும் தன்னம்பிக்கையை மேம்படுத்தி, எல்லோருடைய நல்வாழ்வுக்கும் விளையாட்டு உதவுகிறது. அன்புப் பாலங்களையும், சமூக நல்லிணக்கத்தையும் உருவாக்கும் ஆற்றல் விளையாட்டுகளுக்கு உண்டு.

விளையாட்டுத் துறையிலும், தமிழ்நாட்டை உலக அளவில் கவனம் ஈர்க்கும் மாநிலமாக உயர்த்த வேண்டும் என்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி அவர்களை நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசின் அழைப்பை ஏற்று, இங்கு வருகை தந்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பல்வேறு மாநிலங்களில் இருந்து பங்கேற்றுள்ள 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களை வரவேற்று வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



‘கேலோ இந்தியா 2023’ விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைக்க நேற்று முன்தினம் (19–01–2024) சென்னை வந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்களை சால்வை அணிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வரவேற்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘கேலோ இந்தியா 2023’ விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைக்க நேற்று முன்தினம் (19–01–2024) சென்னை வந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு க.கு.ர.மு. ரத்தின பாஸ்கர் அவர்களின் ‘உளி ஓவியங்கள்’ நூலை வழங்கி வரவேற்றார். மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் எதிரில் உள்ள புதுமண்டபம் எனும் வசந்த மண்டபத்தில் உள்ள சிற்பங்களை க.கு.ர.மு. ரத்தின பாஸ்கர் அவர்கள் கோட்டோவியங்களாக வரைந்துள்ளதுதான் இந்த நூல். இந்த நூலின் முன்னுரையில் மதுரை மாநகரின் வரலாறும், மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலின் கிழக்குக் கோபுரத்திற்கு எதிரில் அமைந்துள்ள புதுமண்டபத்தின் வரலாறும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சுமார் 380 ஆண்டுகளாக மதுரையின் கலைப்பெட்டகமாக விளங்கி வரும் புதுமண்டபச் சிற்பங்களின் கோட்டோவியங்களையும் அவற்றைப் பற்றிய விளக்கங்களையும் கொண்டுள்ள இந்த நூல் அரிய கலை ஆவணமாகும்.

### கோடை கால சீசன்! தொட்டபெட்டாவில்

## புதுப்பொலிவுடன் தேயிலைப் பூங்கா!

*ஊட்டி, ஜன.21-*

*கோடை சீசனுக்காக ஊட்டி அடுத்துள்ள தொட்டபெட்டா தேயிலை பூங்கா தயாராகி வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் கோடை காலமான ஏப்ரல் மட்டுமே மாதங்களில் அதிக அளவு சுற்றுலா பயணிகள் ஊட்டிக்கு வருகின்றனர். இதனால், சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பூங்காக்களும் தயார் செய்யப்படும். இதற்காக ஊட்டி தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, குன்னூர் சிம்ஸ் பூங்கா, தொட்டபெட்டா தேயிலை பூங்கா, காட்டேரி பூங்கா உட்பட அனைத்து பூங்காக்களிலும் முன்னதாக மலர் நாற்றுகள் நடவு செய்யப்படும். அந்த நாற்றுகளில் ஏப்ரல், மே மாதங்களில் பல வண்ணங்களில் மலர்கள் பூத்து குலுங்கும். அதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்வது வழக்கம். இந்த நிலையில், கோடை சீசனுக்காக தோட்டக்கலைத் துறை சார்பில் தற்போது அனைத்து பூங்காக்களையும் தயார் செய்யும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.*

## நிலவில் தரையிறங்கிய 6வது நாடு என்ற பெருமையைப் பெற்றது ஜப்பான்!

டோக்கியோ, ஜன.21-

ஜப்பானின் ஸ்மார்ட் லேன்டர் ஃபார் இன் வெஸ்டிகேடிங் மூன் (SLIM) நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியது. இவ்வாறு நிலவில் தரையிறங்கிய 6வது நாடு என்ற பெருமையை ஜப்பான் பெற்றிருக்கிறது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாத வாக்கில் இந்தியாவின் சந்திரயான் 3 நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியது. இதைத் தொடர்ந்து நிலவில் தரையிறங்கிய 6வது நாடு என்ற பெருமையை ஜப்பான் பெற்றுள்ளது. ஜப்பானின் விண்வெளி ஆய்வு மையம் 100 மீட்டர் தொலைவில் இருந்து நிலவில் லேண்டரை தரையிறங்க முயற்சித்தது.

தற்போது லேண்டர் வெற்றிகரமாக தரையிறங்கிய நிலையில், இந்த விண்கலம் தனது செயல்பாடுகளில் வெற்றி பெற்றுள்ளதா என்பதை அறிந்து கொள்ள ஒரு மாத காலம் வரை ஆகலாம் என ஜப்பான் விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்து இருக்கிறது.